بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)**

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 1, ஜனவரி 2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 01, January 2016 (Tamil)**

**நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களை வீணாக்குபவர்களாக ஆகிவிடக் கூடாது. மாறாக, அவர்கள் தமது ஜமாஅத்துக்காக செய்த துஆக்களுக்கு எப்போதும் வாரிசாக வேண்டும். இந்த துஆவுடன் நான் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் இந்த ஆண்டை நமக்கு தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் எப்போதும் அருளுக்குரியதாக ஆக்குவானாக.**

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று புத்தாண்டின் முதல் நாளாகும். மேலும் இது அருளுக்குரிய ஜுமுஆவிலிருந்து ஆரம்பமாகின்றது. மரபுப்படி, நாம் புத்தாண்டு ஆரம்பமாகும்போது ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். எனக்கும் ஜமாஅத் சகோதரர்களிடமிருந்து வாழ்த்துக்குரிய தூது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. நீங்களும் உங்களில் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருப்பீர்கள். மேற்கத்திய நாடுகளில் அல்லது முன்னேற்றமடைந்தவர்கள் என அழைக்கப்படும் நாடுகளில் புத்தாண்டின் முழு இரவும் மது அருந்துதல், கூத்தாடுதல், பட்டாசுகளை வெடித்தல், வான வேடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் புத்தாண்டு ஆரம்பிக்கப்படுகிறது. இன்னும் கூறுவதென்றால், முஸ்லிம் நாடுகளிலும் புத்தாண்டு இவ்வாறே வரவேற்கப்படுகிறது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளில் பலர் தமது இரவை இறைவணக்கத்திலும், அதிகாலையில் சீக்கிரம் எழுந்து நஃபில் தொழுது புத்தாண்டின் முதல் நாளை துவக்கியிருக்கின்றனர். பல இடங்களில் ஜமாஅத்தாக தஹஜ்ஜுது தொழுகை நடைபெற்றுள்ளது. ஆனால் அப்படி இருந்தும் நாம் முஸ்லிம்களின் பார்வையில் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆவோம்! மேலும் கூத்தாடிக்கொண்டிருக்கும் இவர்கள், பணத்தை வீணாக்கிக் கொண்டிருக்கும் இவர்கள் மார்க்கத்தைச் சாராதவர்களின் சம்பிரதாயங்களை மிகவும் ஏற்பாட்டுடன் கொண்டாடும் இவர்கள் முஸ்லிம்கள் ஆவர்!!

எப்படியிருந்தபோதிலும் நாம் அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்கள் ஆவோம். மேலும் நமக்கு எவருடைய சான்றும் தேவையில்லை. ஆயினும் யாருடைய சான்றையாவது நாம் விரும்புகிறோம் என்றால் அது அல்லாஹ்வின் பார்வையில் உண்மையான முஸ்லிமாக மாறி சான்றைப் பெற வேண்டும் என்பது மட்டுமேயாகும். அதற்கு நாம் புத்தாண்டின் முதல் நாளில் தனிப்பட்ட முறையில் அல்லது ஜமாஅத்தாக தஹஜ்ஜுது தொழுது விட்டோம் அல்லது தருமம் செய்து விட்டோம். அல்லது நன்மையின்வேறு சில விஷயங்களை செய்து விட்டோம். அவை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு உரிமையுடையவராக நம்மை ஆக்கி விட்டது என்பது மட்டுமே நமக்குப் போதாது. அல்லாஹ் தன் அடியாரிடம் நிரந்தமான நன்மையை நாடுகிறான். அல்லாஹ், தனது அடியார் தனது கட்டளைகளை நிரந்தமாக செய்பவராக இருக்க வேண்டும்; நன்மையை செய்பவராக இருக்க வேண்டும் என விரும்புகிறான். தொழுகைகள் மற்றும் தஹஜ்ஜுதுகளின் மூலமாக உள்ளத்தில் ஒரு தூய புரட்சியை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. அப்போது அல்லாஹ் திருப்தி

கொள்கிறான். ஒரு நாள் அல்லது இரண்டு நாளுக்காக செய்யும் நன்மை நன்மை அன்று. எனவே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குகின்ற எத்தகைய செயலை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இதற்காக நான் இன்று இக்காலத்தின் சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் அவர்கள் நிரந்தமாகவும் தொடர்ச்சியாகவும் நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக பல்வேறு நேரங்களில் தனது ஜமாஅத்துக்கு வழங்கிய சில அறிவுரைகளை நான் தேர்ந்தெடுத்திருக்கின்றேன். இந்த விஷயங்கள்தான் ஆண்டின் முதல் நாளை மட்டுமின்றி ஆண்டின் 12 மாதங்களையும், 365 நாட்களையும் அருளுக்குரியவையாக ஆக்கும். மேலும் நாம் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

''இப்போது உலகத்தின் நிலைமையைப் பாருங்கள். நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் எனது வாழ்வும் எனது மரணமும் எல்லாம் அல்லாஹ்வுக்காகும் என தமது செயலால் காட்டினார்கள். இப்போது உலகில் வாழும் எந்த முஸ்லிமிடமாவது நீ முஸ்லிமா? என்று கேட்டால் அல்ஹம்து லில்லாஹ் என்று கூறுகிறார். எவருடைய கலிமாவை ஓதுகின்றாரோ (அதாவது நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம்) அவருடைய வாழ்க்கையை அடைவது இறைவனாக இருந்தது. ஆனால் (பெயரளவில் கலிமா கூறும்) இவரோ உலகிற்காக வாழ்கின்றார். (அதாவது லாயிலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுகிறார் என்றாலும் வாழ்வது உலகிற்காகத்தான்). மேலும் மரண நேரம் நெருங்கும் நேரம் வரைஉலகிற்காகவே மரணிக்கின்றார். மரணம் வரும்போது உலகமே அவருடைய நோக்கமாகவும், நேசத்திற்குரியதாகவும் குறிக்கோளாகவும் இருக்கிறது. பிறகு நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறேன் என எப்படி அவர் கூற முடியும்? இது மிகவும் கவனிக்கத்தக்க விஷயமாகும். இதை மேலோட்டமாகக் கருதிக் கொள்ளாதீர்கள். முஸ்லிமாகுவது எளிமையானதன்று. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றாத வரை - உங்களிடத்தில் இஸ்லாத்தின் முன்மாதிரியை உருவாக்காத வரை நிம்மதியாக இருக்காதீர்கள்....''

''சுருக்கமாக, மனிதனுடைய வாழ்க்கைக்கு ஒரு நோக்கமும் குறிக்கோளும் இருக்க வேண்டும் என்பதை இப்போது உங்களால் நன்றாகப் புரிய முடியும். ஏனெனில் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராகாத வரை - அல்லாஹ்வின் அன்பு கிடைக்காத வரை வெற்றிகரமான வாழ்க்கையை வாழ முடியாது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உண்மையான முறையில் பின்பற்றாத வரை - அவர்களுக்குக் கட்டுப்படாத வரை இது நடக்க முடியாது. மேலும் இஸ்லாம் என்றால் என்ன என்பதை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் தமது செயலினால் காட்டி விட்டார்கள். எனவே நீங்கள் இறைவனின் அன்பிற்குரியவராக மாறுவதற்கு அந்த இஸ்லாத்தை உங்களிடத்தில் உருவாக்குங்கள்.''

இஸ்லாத் உலக அருள்களை தடுக்கவில்லை. மாறாக, உலகில் இருந்து கொண்டு மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு அறிவுறுத்துகிறது. இது தொடர்பாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''**இஸ்லாம் துறவறத்தைத் தடுக்கிறது. அது கோழைகளின் வேலையாகும்.** நம்பிக்கையாளரின் தொடர்பு உலகத்துடன் எந்த அளவுக்கு பரந்ததாக இருக்குமோ அந்த அளவுக்கு அது அவருடைய உயர்ந்த அந்தஸ்துக்கு காரணிகளாக அமைகின்றது. ஏனெனில் அவருடைய குறிக்கோள் மார்க்கமாக இருக்கிறது. உலகம், அதன் செல்வம் மற்றும் கண்ணியம் ஆகியவை அவருடைய தொண்டனாக இருக்கின்றது. எனவே உண்மை என்னவென்றால், உலகமே அசல் குறிக்கோளாக இருக்கக் கூடாது. மாறாக, உலகத்தைப் பெறுவதிலும் உண்மையான குறிக்கோள் மார்க்கமாக இருக்க வேண்டும். உலகம் மார்க்கத்திற்கு தொண்டனாக இருக்கும் வகையில் அதைப் பெற வேண்டும். உலகத்தை மேற்கொள்வதால் நன்மையாகவும் நல்லதாகவும் இருக்கும் அத்தகைய எல்லா வழிமுறையிலும் அந்த உலகத்தைப் பெறுங்கள். பிற மனித படைப்பு துன்பம் அடைவதற்குக் காரணமாக வழிமுறையில் அல்ல. உங்களைச் சார்ந்தவர்களுக்கு எவ்வித வெட்கத்திற்கும் காரணமாக இல்லாத அளவுக்கு உலகத்தைப் பெற முயற்சி செய்யுங்கள். **அப்படிப்பட்ட**

**உலகம் சந்தேகமின்றி மறுமையின் வெற்றிக்குக் காரணமாக அமையும்''**

''எனவே மனிதன், செல்வம் அல்லது சந்ததிகள் ஆகியவற்றின் மீதுள்ள உணர்ச்சியினாலும் மோகத்தினாலும் அதற்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு திரை உருவாகிவிடும் அளவுக்கு பைத்தியக்காரனாக மாறி விடக் கூடாது என்ற விஷயம் நமது நண்பர்களுக்கு (அதாவது அஹ்மதிகளுக்கு) மறைவானதாக இருக்க வேண்டாம். (அதாவது இறைவன் தொலைவில் ஆகிவிடக் கூடாது.) அல்லாஹ்வுடனுள்ள தொடர்பு முடிந்து விடக் கூடாது.''

**பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அர்ரஹ்மானிர் ரஹீம். மாலிக்கி யவ்மித்தீன் என்பதிலிருந்து மனிதன் இந்த பண்புகளை தன்னிடம் மேற்கொள்ள வேண்டும் என்பது நிரூபணமாகின்றது என்பது எனது உள்ளத்தில் தோன்றுகிறது. அதாவது ரப்புல் ஆலமீன் ஆகிய அல்லாஹ்வுக்கு எல்லா பண்புகளும் பொருத்தமானவையாகும். அதாவது (படைத்து, வளர்த்து, காத்தோம்பும் பண்பாகிய) ரப்புல் ஆலமீன் என்பது விந்து, சதைக் கட்டி ஆகிய எல்லா உலகங்களுக்கும் (பொருத்தமானதாக இருக்கிறது.) சுருக்கமாக, அனைத்து உலகங்களுக்கும். பிறகு ரஹ்மான் ஆகும். ரஹீம் ஆகும். மாகிக்கி யவ்மித்தீன் ஆகும். இப்போது இய்யாக நஃ புது (நாங்கள் உன்னையே வணங்குகிறோம்) எனக் கூறுபவர் அந்த இறைவணக்கத்தில் அந்த ருபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், மாலிகிய்யத் ஆகிய பண்புகளின் பிம்பத்தை தன்னிடம் ஏற்றுக் கொள்ள வேண்டும். (அதாவது இறைவனின் இந்த பண்புகளை தன்னிடத்திலும் மேற்கொள்ள வேண்டும்.) மனிதன் முழுமையான அப்து (இறையடியார்) ஆக இருத்தல் என்பது *தகல்லகூ பிஅக்லாக்கில்லாஹ்* என்பதேயாகும். அதாவது அல்லாஹ்வின் பண்பிற்கேற்ப தன் பண்பை மாற்றிக் கொள்வதாகும்.......இந்த அந்தஸ்தை அடையாதவரை களைப்படையவும் கூடாது; தோல்வி காணவும் கூடாது.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அவர் மரணத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே நற்பேறு ஆகும். ஒருவருடைய கடைசி காலத்தில், பிரிந்து செல்லும் நேரத்தில் அவருக்கு துன்பத்திற்குக் காரணமாக இருக்கும் அளவுக்கு உலகமும் அதிலுள்ளவையும் நேசத்திற்குரியதாக ஆகி விடக் கூடாது. இது நினைவில் இருக்கும்போது பின்னர் மனிதன் நன்மைகளை செய்ய முயற்சி செய்வார். பிறகு தேவையில்லாத கேளிக்கைகளில் காசை வீணாக்க மாட்டார். நேரத்தையும் வீணாக்க மாட்டார். தேவையில்லாத ஆசைகளை நிறைவேற்றுவதற்காக அந்தப் பொருள்களை செலவு செய்யவும் மாட்டார்.''

**பிறகு தூய மாறுதலை உருவாக்குவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எனவே அச்சமின்றி இருக்காதீர்கள். பாவமன்னிப்பை கோருவதிலும், துஆக்களிலும் ஈடுபட்டிருங்கள். ஒரு மாறுதலை உருவாக்குங்கள். இப்போது கவனமற்றிருக்கும் அப்படிப்பட்ட நேரம் இல்லை. **மனிதனுக்கு அவனது உள்ளம், உனது வாழ்நாள் நீண்டது என பொய்யான ஆறுதலைக் கூறிக் கொண்டிருக்கிறது. மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள்.** இறைவன் இருப்பது உண்மையாகும். எவர் அநியாயமான வழியில் இறைவனுக்குரிய உரிமையை மற்றவருக்குக் கொடுக்கிறாரோ அவர் இழிவான மரணத்தைக் காண்பார்.....''

பிறகு தூய மாற்றம் மற்றும் மறுமை பற்றிய கவலை இறையச்சத்தினால் உருவாகிறது. மேலும் இறையச்சம்தான் மனிதனுக்கு மறுமையில் கண்ணியத்தை வழங்குகிறது. **இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இறையச்சம் கொண்டவர்களுக்கு ஒரு தனித் தோற்றம் இருக்கிறது. அவர் இறைவனின் நிழலில் இருக்கிறார். ஆனால் இறையச்சம் தூயதாக இருக்க வேண்டும். அதில் ஷைத்தானின் எந்த பகுதியும் இருக்கக் கூடாது. இறையச்சம்தான் அசலாகும். இதை நினைவில் கொள்ளுங்கள். இதற்காக நீங்கள் இறையறிவிப்புகள், ஆன்மீகக் கனவுகளின் பின்னால்

செல்லாதீர்கள். **ஒருவருக்கு இறையறிவிப்பு கிடைத்து விட்டது அல்லது ஆன்மீகக் கனவு கிடைத்து விட்டது அல்லது உண்மையான கனவு கிடைத்து விட்டது என்பதற்காக இறையறிவிப்புகள் மற்றும் ஆன்மீகக் கனவுகளின் பின்னால் செல்லாதீர்கள். இறையச்சத்தைப் பெறுவதன் பின்னால் செல்லுங்கள். எவருக்கு என்ன வருகின்றது? உண்மைக் கனவுகளா என்ன? என்று பார்க்காதீர்கள். இறையச்சம் இருக்கிறதா என்று பாருங்கள்.** எவர் இறையச்சம் கொண்டவராக இருக்கிறாரோ அவருக்கு வரும் இறையறிவிப்புகளும் உண்மையானவையாகும். இறையச்சம் இல்லையென்றால் இறையறிவிப்புகளும் நம்பத்தகுந்தவையல்ல. **எனவே இறையச்சத்தின் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்காக எல்லாவிதமான துன்பங்களையும் தாங்கிக் கொள்வதற்கு ஆயத்தமாகுங்கள். இறையச்சமும் ஒரு தேர்வாகும். அதற்கும் உழைக்க வேண்டியதிருக்கிறது.** மனிதன் இந்த வழியில் காலெடுத்து வைக்கும்போது ஷைத்தான் அவர் மீது மாபெரும் தாக்குதல்களை நடத்துகின்றான். ஆனால் ஓர் எல்லையை அடைந்த பிறகு கடைசியில் ஷைத்தான் நின்று விடுகிறான். இது மனிதனுக்கு தனது கீழ்மட்டத்திலுள்ள வாழ்வின் மீது மரணம் ஏற்பட்டு அவன் இறைவனின் நிழலின் கீழ் ஆகிவிடும் நேரமாகும். அவர் இறைவனின் தோற்றமாகவும் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும் ஆகிவிடுகிறார். நமது போதனையின் சுருக்கம் என்னவென்றால், மனிதன் தனது எல்லா ஆற்றல்களையும் இறைவனிடம் ஈடுபடுத்த வேண்டும்.''

பிறகு இறையச்சத்தை சுட்டிக் காட்டியவாறே நமக்கு அறிவுரை வழங்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இறையச்சம் கொண்டவர்களுக்குரிய நிபந்தனை என்னவென்றால், அவர்கள் தமது வாழ்வை ஏழ்மையிலும், எளிமையிலும் கழிக்க வேண்டும். இது இறையச்சத்தின் ஒரு கிளையாகும். அதன் மூலமாக நாம் தகாத கோபத்தை எதிர்க் கொள்ள வேண்டும். **தேவையில்லாமல் நமக்கு வரும் கோபம் அல்லது தேவையில்லாமல் நம் மீது இருக்கும் இன்னொருவருடைய கோபம் ஆகியவற்றை இறையச்சத்தின் மூலமாக எதிர்க் கொள்ள வேண்டும். மாபெரும் இறைஞானம் கொண்டவர்களுக்கும் சித்தீகுகளுக்கும் இறுதியானதும் கடுமையானதுமான கட்டம் கோபத்திலிருந்து தப்பிப்பதேயாகும்.** சிலர் பெரியவர்களை சந்தித்து மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்கின்றனர். ''

(அதாவது பெரிய மனிதராக இருந்தால் செல்வந்தரும் ஏழையும் மிகவும் மதிப்புடனும் மரியாதையுடனும் அவரை சந்திக்கின்றனர்.)

'' ஆனால் ஏழையின் விஷயத்தை ஏழ்மையாகக் கேட்பவர்தான் பெரியவர் ஆவார்.''

(ஓர் ஏழையின், எளியவரின் விஷயத்தை கேட்க வேண்டும்; மிகவும் அமைதியாகவும் கவனமாகவும் கேட்க வேண்டும்).

''அவருடைய உள்ளத்திற்கு ஆறுதல் வழங்க வேண்டும்; அவருடைய விஷயத்திற்கு கண்ணியமளிக்க வேண்டும்; துக்கத்தைத் தரக்கூடிய எந்தவொரு எச்சலூட்டும் விஷயத்தையையும் வாயிலிருந்து வெளிப்படுத்தக் கூடாது. நீங்கள் ஒருவருக்கொருவர் எரிச்சலூட்டும் பெயரைச் சூட்டாதீர்கள். இது தீயதாகும் என அல்லாஹ் கூறுகிறான். எவர், ஒருவரை ஏளனத்திற்குள்ளாக்குகிறாரோ அவர் அதே மாதிரி சோதனைக்குள்ளாகாதவரை மரணமடைய மாட்டார். **உங்கள் சகோதரர்களை அற்பமானவர்களாகக் கருதாதீர்கள். நீங்கள் ஒரே நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்தும்போது எவருடைய நற்பேற்றில் அதிகம் தண்ணீர் அருந்துவது என்பதை யார் அறிவார்?** கண்ணியத்திற்குரியவராக இருப்பதும், மதிப்பிற்குரியவராக இருப்பதும் எந்த உலக கோட்பாட்டின் அடிப்படையிலும் இருப்பதில்லை. இறைவனின் பார்வையில் இறையச்சமுள்ளவரே பெரியவராவார். *இன்ன அக்ரமக்கும் இந்தல்லாஹி அத்காக்கும்.* உங்களின் அதிக இறையச்சமுடையவர்தான் நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அதிக கண்ணியத்திற்குரியவர் ஆவார்.''

**பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘உங்களுக்கு (இம்மை, மறுமை ஆகிய) இரு வீட்டிலும் வெற்றி கிடைக்க வேண்டுமென்றால்- மக்களின் உள்ளங்களில் வெற்றி பெற வேண்டுமென்றால் தூய்மையை மேற்கொள்ளுங்கள். அறிவுடன் செயல்படுங்கள். இறைவனின் வழிகாட்டலின்படி செயல்படுங்கள். உங்களை சரி செய்யுங்கள். மற்றவர்களுக்கு உங்களின் சிறப்பான நல்லொழுக்கங்களின் முன்மாதிரியைக் காட்டுங்கள். அப்போது நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.’’

பிறகு, கூறுவதற்கு முன் செயல்படுங்கள் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘இந்த மாதிரியான மக்கள் செயல் அளவிலான ஆற்றலைக் கொண்டிருந்தால்- கூறுவதற்கு முன்னர் தாம் செயல்பட்டால் திருக்குர்ஆன் *லிம தகூலூன மாலா தஃப்அலூன்* (நீங்கள் செய்யாத ஒன்றை ஏன் பிறக்கு செய்யுமாறு கூறுகிறீர்கள்?) என்று கூற வேண்டிய அவசியம் என்ன? உலகத்திற்குக் கூறிக் கொண்டு, தாம் செய்யாதவர்களும் இருந்தார்கள்; இருக்கின்றார்கள்; இருப்பார்கள் என்பதை இந்த வசனமே தெரிவிக்கின்றது .’’

எனவே இதன்படி திருக்குர்ஆனின் கட்டளைப்படி செயல்பட வேண்டுமென்றால் இதன் பக்கமும் கவனிக்க வேண்டியது வரும். பிறகு குறிப்பாக நாம் முதலில் இந்த அறிவுரையை பற்றி ஆய்வு செய்ய வேண்டும். **இந்த அடிப்படையான அறிவுரையை பொறுப்பாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் மற்றவர்கள் தம்மிடம் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என நம்புகின்றனர். அவர்களுக்கு அறிவுரை கூறுகின்றனர். ஆனால் தமது விவகாரங்களில் அத்தகைய சூழ்நிலை உருவானால் முற்றிலும் அதற்கு நேர்மாறாக செயல்படுகின்றனர். அல்லது அதில் சாக்குப்போக்குகளைக் கூறுகின்றனர்.** மேலும் இறைவனின் காட்டளைகளுக்கு இறைதூதரின் கட்டளைகளுக்கு இரண்டாம் அந்தஸ்தைக் கொடுக்கின்றனர். அப்படிப்பட்ட பல விவகாரங்கள் முன்னால் வருகின்றன.

பிறகு சொல்லிலும் செயலிலும் ஒற்றுமை இருக்க வேண்டும் என்பது குறித்து **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘நீங்கள் எனது விஷயத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள். மனிதனுடைய பேச்சு உண்மையான உள்ளத்துடன் இல்லையென்றால் - அதில் செயல் அளவிலான ஆற்றல் இல்லை என்றால் அது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதில்லை என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.’’

பிறகு ஒருவருக்கொருவர் சகோதரத்துவத்துடனும் அன்புடனும் இருப்பது பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘ஜமாஅத்தின் ஒற்றுமை பற்றியும் அன்பு பற்றியும் நான் இதற்கு முன் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். நீங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் இருங்கள். ஒருமைப்பாட்டுடன் இருங்கள்; நீங்கள் ஒற்றுமையை கைக்கொள்ளுங்கள்; இல்லையென்றால் நீங்கள் பலவீனமடைந்து விடுவீர்கள் என்ற போதனையையே இறைவன் முஸ்லிம்களுக்கு வழங்கியிருந்தான். **தொழுகையில் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து நிற்பதற்கான கட்டளை, ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டிருங்கள் என்பதற்காகவேயாகும். மின்னலில் ஆற்றலைப் போன்று ஒருவருடைய நன்மை மற்றவரிடம் நுழைந்து விடும். முரண்பாடு இருக்குமென்றால் - ஒற்றுமை இல்லாவிட்டால் பிறகு நீங்கள் பேறிழந்தவராகி விடுவீர்கள்.’’**

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘என் மூலமாக ஒரு நல்ல ஜமாஅத் உருவாகும்-இன்ஷா அல்லாஹ். ஒருவருக்கொருவருடன் இருக்கும் பகைமைக்குக் காரணம் என்ன? கருமித்தனமும், தற்பெருமையும், தன்னலமும் ஆவேசமும் ஆகும்.’’

இப்படிப்பட்ட மக்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்

மிகவும் கவலையுடன் இவ்வாறு கூறுகிறார்கள்:

''எவர்கள் கருமிதனம் காட்டுகின்றார்களோ, தற்பெருமை கொள்கிறார்களோ, தன்னலம் காட்டுகிறார்களோ தமது நஃப்ஸை கட்டுப்படுத்துவதில்லையோ அப்படிப்பட்டவர்களை நான் ஜமாஅத்திலிருந்து வெளியேற்றி விடுவேன். அப்படிப்பட்டவர்கள் அழகிய முன்மாதிரியைக் காட்டாத வரை சில நாள் விருந்தினர்கள் ஆவர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளட்டும். **நான் எவருக்காகவும் என் மீது ஆட்சேபணையை வாங்கிக் கொள்ள விரும்பவில்லை. எனது ஜமாஅத்தில் இருந்து கொண்டு எனது விருப்பத்திற்கு ஏற்ப இல்லாதவர் காய்ந்த கிளையாவார். அதை தோட்டக்காரர் வெட்டாமல் வேறு என்ன செய்வார்? காய்ந்த கிளை மற்ற பசுமையான கிளைகளுடன் சேர்ந்து தண்ணீரை உறிஞ்சுகிறது. ஆனால் அது தன்னை பசுமையானதாக மாற்ற முடியாது. மாறாக, அந்த கிளை மற்றவற்றையும் நாசமாக்கி விடுகிறது.''**

துஆ ஒப்புக்கொள்ளப்படுவது பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

**''இந்த விஷயத்தையும் உள்ளத்தால் கேட்டுக் கொள்ள வேண்டும். துஆ ஒப்புக்கொள்ளப்படுவதற்கும் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவற்றில் சில துஆ செய்பவருடன் தொடர்புடையவையாகும்; மேலும் சில துஆ செய்யக் கூறுபவருடன் தொடர்புடையவையாகும்.** துஆ செய்ய வைப்பதற்கு அவர் அல்லாஹ்வைப் பற்றிய பயத்தையும் அச்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் அவனுடைய தன்னிறைவுத்தன்மை பற்றி எந்நேரமும் பயந்து கொண்டிருக்க வேண்டும். மேலும் சமாதானத்தையும் இறையச்சத்தையும் தனது பண்பாகக் கொண்டிருக்க வேண்டும். இறையச்சம், நேர்மை ஆகியவற்றால் இறைவனை மகிழ்விக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் துஆ ஒப்புக்கொள்ளப்படுவதன் வாசல் திறக்கப்படுகிறது.''

எனவே துஆ ஒப்புக்கொள்ளப்படுவதற்கு இறையச்சம் ஒரு கட்டாய நிபந்தனையாக இருக்கும்போது ஒரு மனிதன் கவனமற்றவனாக இருந்து, பாதை மாறியவனாகி துஆ ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என விரும்பினால் அவர் மடையரும் அறிவில்லாதவரும் இல்லையா? எனவே நமது ஜமாஅத்தில் ஒவ்வொருவரும் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதன் இன்பத்தையும், இனிமையையும் பெறுவதற்காகவும் ஈமானிலிருந்து அதிகமான பங்கைப் பெறுவதற்காகவும் முடிந்த வரை இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்க வேண்டும். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்தற்கேற்ப நமது வாழ்வை உருவாக்குபவர்களாகவும், நமது கால்கள் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நன்மைகளின் பக்கம் முன்னேறக் கூடியதாகவும் அல்லாஹ் இருக்கச் செய்வானாக. நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களை வீணாக்குபவர்களாக ஆகாதிருப்போமாக. மாறாக, அவர்கள் தமது ஜமாஅத்துக்காக செய்த துஆக்களுக்கு எப்போதும் நாம் வாரிசாக ஆவோமாக. **இந்த துஆக்களுடன் நான் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் இந்த ஆண்டை நமக்கு தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் எண்ணற்ற அருள்களுக்கு காரணமாக ஆக்குவானாக.**

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By** ***O.M. Muzzammil Ahmad***